

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.5.2025) நீலகிரி மாவட்டம், தொட்டபெட்டா காட்சிமுனைப் பகுதியில், அங்கு பணிபுரியும் பணியாளர்களுடன் கலந்துரையாடி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (13.5.2025) அன்று நீலகிரி மாவட்டம், தெப்பக்காடு யானைகள் முகாமில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வன சரகர்களின் பயன்பாட்டிற்காக 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவிலான 30 பொலிரோ வாகனங்கள் மற்றும் 2 சிறப்பு ரோந்து வாகனங்கள் (All Terrain Vehicles), என மொத்தம் 32 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, வனத்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## பொள்ளாச்சி சம்பவம்: நீதிமன்றம் உத்தரவிட்ட தொகைக்கும் கூடுதலாக

# பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தலா ரூ.25 லட்சம் நிவாரணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, மே 16–**

**பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை குற்றச்செயலில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்ட தொகைக்கும் கூடுதலாக ஒவ்வொரு பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் தலா ரூ. 25 லட்சம் நிவாரணத் தொகை உயர்த்தி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

**இதுகுறித்து வெளியான அரசு செய்திக் குறிப்பு வருமாறு:-**

2019 ஆண்டு நடைபெற்ற பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவம் தமிழ்நாட்டு மக்களிடையே கடும் அதிர்ச்சியை உண்டாக்கியது. தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிராக நிகழ்ந்த மிகக்கொடுமையான குற்ற சம்பவமாக கருதப்படும் இந்த வழக்கை விசாரணை செய்த கோயம்புத்தூர் மகளிர் நீதிமன்றம் சமீபத்தில் வழங்கிய தீர்ப்பு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்றது. இந்த கொடுஞ்செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை என வழங்கப்பட்டுள்ள கடுமையான தண்டனை குற்றச்செயலில் ஈடுபட முனைவோருக்கு ஒரு கடுமையான எச்சரிக்கையாக இருக்கும்.

தற்போது தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கி பெண்களுக்கு பல்வேறு வகைகளிலும் அதிகாரம் அளித்திட தமிழ்நாடு அரசு சிறந்த முயற்சிகளை எடுத்துள்ளது. தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் தோழி விடுதிகள், புதுமைப் பெண், நான் முதல்வன் போன்ற முன்னோடி திட்டங்களின் விளைவாக மாநிலத்தில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இரண்டிலும் மாணவிகளின் சேர்க்கை அதிகரித்து உள்ளது. இந்தியா முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 41சதவீதம் பேர் இம்மாநிலத்தில் பணி



புரிகின்றனர்.

பெண்களின் பாதுகாப்பிற்கு அரணாகத் திகழக்கூடிய திராவிட மாடல் அரசு, பெண்களுக்கு எதிராகக் குற்றச்செயலில் ஈடுபடுவதற்கு அஞ்சிடும் வகையில் பெண்களுக்குத் துன்பம் விளைவித்தலை தடை செய்கின்ற சட்டத்தை சமீபத்தில் திருத்தம் செய்து குற்றச்செயல்களுக்கான தண்டனையை மிகவும் கடுமையாக்கியுள்ளது. மேலும், இந்திய தண்டனைச் சட்டத்திலும் பெண்களுக்கு எதிரான தண்டனையை கடுமையாக்கும் விதமாக உரிய சட்டத்திருத்தத்தினை சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றி ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்துள்ளது. இதனால், குற்றவாளிகள் தங்கள் குற்றங்களுக்கு கடுமையான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

இவ்வழக்கில் கடந்த 13.05.2025 அன்று கோயம்புத்தூர் மகளிர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மொத்தமாக ரூ.85 லட்சம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தவழக்கில் பாதிக்கப்பட்ட பெண்கள் தைரியமாக முன்வந்து புகார் அளித்தது மட்டுமல்லாமல் நீதிமன்ற விசாரணைக் குழு ஒத்துழைப்பும் அளித்ததன் அடிப்படையிலேயே இந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைத்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைத்துள்ளது. அத்தகைய நியாயத்திற்காக துணிச்சலுடன் போராடிய பெண்களின் தைரியம் பாராட்டுக்குரியது.

அந்த வகையில், நீதிமன்றம் உத்தரவிட்ட மொத்த நிவாரணத் தொகையாகிய ரூ.85 லட்சத்திற்கும் கூடுதலாக, பாதிக்கப்பட்ட பெண்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 லட்சம் என நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கைப் போன்று

# கொடநாடு கொலையாளிகளுக்கும் தக்க தண்டனை கிடைக்கும்!

## உதகையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**உதகை, மே 16 –**

**“பொள்ளாச்சி வழக்கைப் போன்று கொடநாடு கொலையாளிகளுக்கும் தக்க தண்டனை கிடைக்கும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உதகையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் பொள்ளாச்சி வழக்கில் குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என 2019 நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையின் போதே நான் பேசியிருந்தேன். எப்படிப்பட்ட பொறுப்பில் இருந்தாலும் சரி, எவ்வளவு பெரிய செல்வாக்கு பெற்றிருந்தாலும் சரி.. நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள் என்று சொன்னேன். அதுதான் இப்போது நடந்திருக்கிறது. இதுதொடர்பாக நடந்து முடிந்த சட்டசபை கூட்டத்தொடரிலும் பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி என நான் கூறினேன். கொடநாடு கொலை கொள்ளை வழக்கிலும் விசாரணை நடைபெற்று வருகிறது. உரிய தண்டனை வழங்கப்படும்.

அ.தி.மு.க. ஆட்சியில் விளையாட்டுத்துறை அமைச்சர் யார் என்பதே தெரியாத நிலைதான் இருந்தது. ஆனால், தற்போது வெளிநாட்டு வீரர்கள் இங்கே வந்து கலந்துகொள்ளும் அளவுக்கு விளையாட்டுக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அதிமுக ஆட்சியில் விளையாட்டுத்துறை அமைச்சர் யார் என்று கேட்டால் தெரியாது, ஆனால் இப்போது யார் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும்.

**எடப்பாடியின் பொய் பித்தலாட்டம்!**

ஒன்றிய அமைச்சர் அமித் ஷாவை எதற்காக எடப்பாடி பழனிசாமி சந்தித்தார் என்பது நாட்டுக்கே தெரியும். ஆனால், தான் சொல்லித்தான் மெட்ரோ, 100 நாள் வேலை ஆகிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டதாக கூறி வருகிறார்.

இந்த மாதிரி மோசமான பொய், பித்தலாட்டத்தை சொல்வதுதான் அவரின் வேலையாக இருக்கிறது. இதுவும் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேட்டி யளித்தார்.



கடலூர் மேற்கு மாவட்டம், பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில், நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு மாபெரும் சாதனை விளக்க பொதுக்கூட்டம், பண்ருட்டி அன்னை இந்திரா காந்தி சாலையில் நடைபெற்றது. பண்ருட்டி நகர மன்றத் தலைவர், நகரச் செயலாளர் க.இராஜேந்திரன் தலைமை தாங்கினார். மாவட்டக் கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். தலைமை கழகப் பேச்சாளர் எசனை ஆறுமுகம் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வி.கே.வெங்கட்ராமன், ஆனந்தி சரவணன், ஜி.கதிர்காமன், சுந்தரவடிவேலு, ஜெயமூர்த்தி, செல்வ துரைராஜ், என்.பலராமன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



முதல்வர் – கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை டவுன் உழவர் சந்தை அருகில் உள்ள ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் உள்ளவர்களை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி நெல்லை மாநகர தி.மு.க. ஏற்பாட்டில் டைட்டானிக் பொருட்காட்சிக்கு நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் அழைத்து சென்றார். நிகழ்வில் வேங்கை வெங்கடேஷ், இசக்கி,ஷெட்டி, அந்தோணி ராஜ், வினோத் குமார், செல்வ பெருமாள், சாதிக், மஸ்தான், சங்கர், ஹாமிம் முஸ்தபா, வேலாயுதம், சுதாகர், பத்மா, பிந்து செய்யது, ஆனி ரேக்லண்ட், ரேவதி அசோக், ஜோதி பிரியா மற்றும் ஆர்.சோயா நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.